31.10.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## ராமநாதபுரத்தில் புதிய நிலக்கடலை ரகத்துக்கான விதைப் பண்ணை அமைப்பு



ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முதலாக சர்வதேச ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட ஐ.சி.ஜி.வி.9114 என்ற புதிய நிலக்கடலை ரகத்துக்காக விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டிருப்பதாக, வேளாண்மை இணை இயக்குநர் அரிவாசன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

ராமநாதபுரம் அருகே அரசரடி வண்டல் கிராமத்தில் விவசாயி கோபாலின் நிலக்கடலை விதைப் பண்ணையினை பார்வையிட்டு ஆய்வு செய்த பின்னர், வேளாண்மை இணை இயக்குநர் அரிவாசன் கூறியது:

நிலக்கடலை சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்திட, அரசு பல்வேறு மானியத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. உற்பத்தி மானியமாக கிலோவுக்கு ரூ. 10, விநியோக மானியமாக ரூ. 25 என வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 51

ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை விதைப் பண்ணைகள் அமைத்து, 72 மெட்ரிக் டன் சான்று பெற்ற நிலக்கடலை கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

விதைப் பண்ணைக்கு தேவையான ஆதார விதைகள் கொள்முதல் செய்யும் பணிகள் வேளாண்மைத் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் பொதுவாக திண்டிவனம்-7 ரக நிலக்கடலையே அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, அதிக எண்ணெய் சதவிகிதம் கொண்ட திண்டிவனம் 13, காதிரி 6, ஐ.சி.ஜி.வி.9114 போன்ற புதிய ரகங்களில் விதைப் பண்ணைகள் அமைத்து, விவசாயிகளுக்கு தேவையான சான்று விதைகளை விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஹைதராபாதில் இயங்கும் மானாவாரி பயிர்களுக்கான சர்வதேச ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட ஐ.சி.ஜி.வி 9114 என்ற புதிய நிலக்கடலை ரகத்துக்காக, ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முறையாக விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது. நிலக்கடலையில் பொக்குகள் இன்றி நன்கு வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளை பெற ஊட்டச்சத்து கலவை அவசியமாகும் என்றார்.

பேட்டியின்போது, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வெள்ளைச்சாமி, விதைச் சான்று உதவி இயக்குநர் எஸ்.எஸ். ஷேக் அப்துல்லா உள்ளிட்ட பல அதிகாரிகளும் உடனிருந்தனர்.

## நெற்பயிரில் பச்சைப்பாசி மேலாண்மை முறைகள்

நெற்பயிரில் பச்சைப்பாசி மேலாண்மை முறைகள் குறித்து நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் யோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து நிலையத்தின் முனைவர்கள் ராஜா. ரமேஷ், ரெ. பாஸ்கரன் ஆகியோர் கூட்டாக வியாழக்கிழமை தெரிவித்தது:

நெல் வயல்களில் பச்சைப்பாசி அடர்ந்து படலம்போல் வளர்ந்து பச்சைப் போர்வை போன்று காணப்படும். இந்த பச்சைப்பாசிகள் நெல்லுக்கு இடப்படும் தழைச்சத்தை எடுத்துக்கொண்டு வளரும் ஆற்றல் கொண்டவை. வயல் முழுவதும் பச்சைப்பாசி வளர்வதால் நெற்பயிரின் வேர்ப்பகுதியில் காற்றோட்டத்தை மட்டுப்படுத்தும். இவற்றினால் வேர்களின் செயல்பாடுகள் பாதிக்கப்பட்டு

சத்துக்களை எடுத்துக்கொள்ள இயலாத நிலை உண்டாவதால், நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றி மஞ்சள் நிறமாகக் காட்சியளிக்கும். பாசிப் படலம் அதிகமாகக் காணப்படும்போது நெற்பயிர்கள் கருகி காணப்படும்.
ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ மயில்துத்தத்தை (காப்பர் சல்பேட்) நன்கு பொடி செய்து 10 கிலோ மணலுடன் கலந்து கோணிப்பையில் இட்டு அதை பாசன வாய்க்கால் வாய்மடையில் வைத்து, தண்ணீரானது மயில்துத்தத்தில் பட்டு கரைந்து வயலுக்குள் பாயுமாறு செய்ய வேண்டும்.
வயலில் நீரை வடிகட்டிய பிறகு 0.5 சதவீத மயில்துத்த கரைசலை (5 கிராம், ஒரு லிட்டர் தண்ணீர்) பாசிப்படலத்தின் மேல் நாற்று நட்ட 10 நாள்களுக்குப் பிறகு 10 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதன் மூலம் பச்சைப்பாசிகளைக் கட்டுப்படுத்தலாம் என்றனர்.

## தமிழகத்தில் தொடங்கியது வடகிழக்கு பருவமழை: வானிலை ஆய்வு மையம்



**சென்னை:** தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை இன்று தொடங்கியது என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் பாலச்சந்திரன் கூறியதாவது:
ஈரப்பதம் மிகுந்த கிழக்கு திசை காற்று தென்னிந்திய பகுதியில் பரவியுள்ளதால் தமிழகத்தில் பரவலாக மழை பெய்துள்ளது. இதன்மூலம் வடகிழக்கு பருவமழை இன்று முதல் தொடங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழையை 3 மாதங்கள் எதிர்பார்க்கலாம். இந்த ஆண்டு சராசரியாக 44 செ.மீட்டர் வரை பெய்யும்.
தமிழகம் மற்றும் புதுச்சேரியில் தற்போது தொடங்கியுள்ள மிதமான மழை அடுத்த 48 மணி நேரத்துக்கு பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழையை எதிர்பார்க்கலாம். சென்னையை பொறுத்த வரை விட்டு விட்டு மிதமான மழை பெய்யும். கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக தஞ்சை மாவட்டம் திருவையாறில் 7 செ.மீட்டர் மழையும், தொழுதூர், வலங்கைமானில் 6 செ.மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

கடந்த ஆண்டு சராசரியாக 67 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. இது சராசரி அளவை விட 23 செ.மீட்டர் அதிகமாகும். சதவீத அளவை பார்க்கும் போது 55 சதவீதம் கூடுதலாகும். சென்னையில் சராசரியாக 78 செ.மீட்டர் மழை பெய்ய வேண்டும். ஆனால் 160 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. இது 104 சதவீதம் அதிகமாகும். என்று கூறினார்.

சென்னையில் இன்று அதிகாலையில் பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்படுகிறது. பருவமழை தொடங்கியதால் வெப்பம் சற்று தணிந்து காணப்படுகிறது. .

தமிழத்தில் தென்மேற்கு பருவமழையும் சரிவர பெய்யாததால் மூன்று போகம் விவசாயம் செய்யும் விவசாயிகள் தற்போது ஒரு போகம் மட்டுமே சம்பா நெல் சாகுபடி செய்து வருகின்றனர். அந்த ஒரு போகத்திற்கும் கர்நாடகா காவிரியில் தண்ணீர் திறந்துவிட மறுத்து நிலையில், தமிழக விவசாய நிலங்கள் பாலைவனமாக மாறிவருகின்றன. இதையடுத்து வடகிழக்கு பருவமழையை நம்பியே உள்ள விவசாயிகளின் மனதில், பருவமழை இன்று முதல் துவங்கும் என்ற வானிலை ஆய்வு மைய அறிவிப்பு மகிழ்ச்சி தரும் வகையில் அமைந்துள்ளது.

## இயற்கை ரப்பர் உற்பத்தி 60,000 டன்



நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி சென்ற செப்டம்பரில் 60,000 டன்னாக இருந்தது.
இதுகுறித்து ரப்பர் வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த செப்டம்பர் மாதத்தில் இயற்கை ரப்பர் உற்பத்தி 60,000 டன்னாக இருந்தது. கடந்த ஆண்டு இதே கால அளவில் உற்பத்தியான 50,000 டன் ரப்பருடன் ஒப்பிடுகையில் இது 20 சதவீத வளர்ச்சியாகும்.

ரப்பர் பயன்பாடு 81,600 டன்னிலிருந்து 3.6 சதவீதம் அதிகரித்து 84,500 டன்னாக காணப்பட்டது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியான ரப்பர் 42,713 டன்னிலிருந்து 24 சதவீதம் உயர்ந்து 52,833 டன்னாக இருந்தது.

நடப்பு நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான முதல் அரையாண்டு காலத்தில் நாட்டின் இயற்கை ரப்பர் உற்பத்தி 2.77 லட்சம் டன்னிலிருந்து 10 சதவீதம் வளர்ச்சி கண்டு 3.05 லட்சம் டன்னாக இருந்தது. அதன் பயன்பாடு

4,91,260 டன்னிலிருந்து 5.6 சதவீதம் அதிகரித்து 5,18,930 டன்னாக காணப்பட்டது.

ரப்பர் உற்பத்தி உள்நாட்டு தேவையை ஈடுசெய்யும் அளவில் இல்லாததையடுத்து, அதன் இறக்குமதி 2,34,887 டன்னிலிருந்து 6.5 சதவீதம் அதிகரித்து 2,50,275 டன்னாக இருந்தது. ரப்பர் ஏற்றுமதி 233 டன்னிலிருந்து அதிகரித்து 516 டன்னாக இருந்தது என்று ரப்பர் வாரியம் அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவித்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பிரையன்ட் பூங்காவில் மலர் செடிகள் நடவு பணி துவக்கம்**

கொடைக்கானல்: கொடைக்கானலில் அடுத்த ஆண்டு 2017 ல் நடைபெறும் மலர் கண்காட்சிக்காக பிரையன்ட் பூங்காவில் மலர் செடிகள் நடவு செய்யும் பணிகள் துவங்கியது.

கொடைக்கானலில் முக்கிய சுற்றுலா இடமான பிரையன்ட் பூங்காவை ஏராளமான சுற்றுலாபயணிகள் கண்டு ரசிக்கின்றனர். பிரையன்ட் பூங்காவில் பல லட்சம் வண்ண மலர்களின் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு ஏப்ரல், மே மாதங்களில் மலர் கண்காட்சிக்காக பூத்து குலுங்குகின்றன. பல வண்ணங்களில் ரோஜா மலர்கள், டேலியா, சால்வியா, அஸ்ஸேலியா, ஆல்சோமியா, போன்ற மலர்கள் பூங்காவில் நடவு செய்து பராமரிக்கப்படுகின்றது. ஆண்டுதோறும் பூங்காவில் முதல் மற்றும் இரண்டாம் கட்ட நடவு பணிகள் நடைபெறுகின்றது. பல நகரங்களிலிருந்து வரவழைக்கப்படும் வீரிய ஒட்டு ரக நாற்றுகள் நடவு செய்யப்படுகின்றன. நேற்று முதல் கட்டமாக பிரையன்ட் பூங்காவில் ஆர்னித்திக்கோலம், பிங்க் ஆஸ்டர் வெர்பினா ஆகிய நாற்றுளை மலர் பாத்திகளில் தோட்டக்கலை பணியாளர்கள் நடவு பணிகளை மேற்கொண்டனர்.

நடவு செய்யப்பட்ட நாற்றுகள் ஜனவரி மாதம் வெள்ளை மற்றும் பிங்க் வண்ணங்களில் பூத்து பூங்காவை அலங்கரிக்கும். மேலும் பல நகரங்களிலிருந்து பல்வேறு வகையான வீரிய ஒட்டு ரக நாற்றுகளை வரவழைக்கப்பட்டு நடவு பணிகள் மேற்கொள்ளப்படும் என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திண்டுக்கல்லில் உரம் தட்டுபாடில்லை வேளாண் அதிகாரி தகவல்

திண்டுக்கல்: திண்டுக்கல்லில் பயிர் சாகுபடிக்கு தேவையான உரங்கள் அனைத்தும் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குனர் தங்கச்சாமி தெரிவித்தார்.

அவர் கூறியதாவது: பருவ மழை போதுமான அளவில் பெய்ய துவங்கியுள்ளதால் விவசாயிகள் விவசாயப் பணியில் மும்முரமாக ஈடுப்பட்டுள்ளனர். சாகுபடி செய்ய ஏற்ற சூழ்நிலை நிலவுவதால் மாவட்டத்தில் நெல், மக்காச்சோளம், பயறு வகைகளை விதைக்கும் பணியை துவங்கியுள்ளனர். அதே சமயம், பயிர் வளர்ச்சிக்கு தேவையான உரங்கள், இடுபொருள்கள் தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயிர் வளர்ச்சிக்கு ஏற்ற யூரியா-2,752, டி.ஏ.பி.,- 1, 696, பொட்டாஷ்- 1, 903, காம்ப்ளக்ஸ்-2, 822 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் தனியார் கிட்டங்கி மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவில் பெறலாம். விவசாயிகள் மண் பரிசோதனைக்கு ஏற்ப தேவையான உ<ரங்களை அளவாகவும், தேவைப்பட்டால் மட்டும் பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும். உரங்களை அதிக விலைக்கு விற்பனை செய்வது குறித்த புகாருக்கு வட்டார வேளாண் உதவி அலுவலர், வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம், என தெரிவித்தார்.

## 10,000 மண் மாதிரி பரிசோதனைக்கு இலக்கு: வேளாண்துறை தீவிரம்

கம்பம்: தேனி மாவட்டத்தில் 2016--17 ம் ஆண்டிற்கு 10 ஆயிரத்து 293 மண் மாதிரி பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தை பொறுத்தவரை வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியில் முக்கிய இடத்தை பிடிக்கிறது. நெல், வாழை, திராட்சை, தென்னை, கொய்யா, மா உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யும் மண்ணில் என்ன சத்துக்கள் அதிகமாக, குறைவாக இருக்கிறது, கார மற்றும் அமிலத்தன்மை போன்ற விபரங்களை தெரிந்து கொண்டால் தான், அதற்கு ஏற்ற பயிர்களை சாகுபடி செய்ய முடியும். தேவையான சத்துக்களுக்கு தேவையான உரங்கள் பயன்படுத்தவும், அதிகமாக இருக்கும் சத்துக்களுக்கு ஏற்ற உரங்களை தவிர்க்கவும் முடியும்.

எனவே மண்பரிசோதனை செய்ய விவசாயிகளை வேளாண் மற்றும் தோட்டக்கலை அதிகாரிகள் வலியுறுத்துகின்றனர். 2016--17 ம் ஆண்டிற்கு மாவட்டத்தில் 10 ஆயிரத்து 293 மண் மாதிரிகள் பரிசோதனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தேனியில் உள்ள தமிழக அரசின் மண்பரிசோதனை ஆய்வுக்கூடத்தில் பரிசோதனைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகிறது.

மண்பரிசோதனை ஆய்வக அதிகாரிகள் கூறுகையில், 'மண்பரிசோதனை முடிவுகளை இணையதளத்தில் ஏற்றி வருகிறோம். சம்பந்தப்பட்ட உதவி இயக்குனர் அலுவலக அதிகாரிகள்

இணையத்தில் உள்ள விபரங்களை பதிவிறக்கம் செய்து விவசாயிகளுக்கு அட்டையாக வழங்குவர். இதற்கான பணியில் ஆய்வக அதிகாரிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

புன்செய் நிலத்தில் எடுக்கப்படும் ஒரு மண் மாதிரி 2.5 ஏக்கர் பரப்பிற்கு பொருந்தும். மானாவாரியில் ஒரு மண் மாதிரி 10 ஏக்கர் பரப்பிற்கு பொருந்தும். எனவே விவசாயிகள் மண்பரிசோதனை முடிவுகளை தெரிந்து அதற்கேற்றபடி சாகுபடி பணிகளை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்,'என்றனர்.

## இயற்கை உரமாக வெள்ளைப்பூண்டு கழிவுகள்

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் குப்பைக்கு செல்லும் வெள்ளைப்பூண்டு

கழிவுகளை, கரும்பு, வாழை பயிர்களுக்கு இயற்கை உரமாக விவசாயிகள் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.

வடுகபட்டி, தாமரைக்குளம் பகுதிகளில் வெள்ளைப்பூண்டு கழிவுகள் இயற்கை உரமாக அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இன்றைய சூழ்நிலையில் விவசாயிகள், உடனடி விளைச்சலுக்காக தொடர்ச்சியாக ரசாயன உரங்களை, அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

ஐந்தாண்டுகளுக்கு பின் சம்பந்தப்பட்ட மண்ணின் வளம் குறைந்து விளைச்சல் பாதிக்கிறது. பின்னர் விவசாயிகள் மண்பரிசோதனை செய்து மண்ணின் வளத்தை அதிகப்படுத்த சிரமப்படுகின்றனர்.

சிறிதளவாவது இயற்கைக்கு மாறும் விவசாயிகள் மண்ணை உழுது, இயற்கை உரங்களான மாட்டுச்சாணம், புண்ணாக்கு கரைசல், சணம்பு உட்பட கீரைச்செடிகளை போட்டு பயிர் செய்கின்றனர். இலவசமாக கிடைக்கும் இயற்கை

உரமான வெள்ளைப்பூண்டு கழிவுகளை பயன்படுத்தி, அதிகளவு விளைச்சல் பெறுகின்றனர்.

விவசாயி முருகன் கூறுகையில், “வெள்ளைப்பூண்டின் அனைத்து பகுதிகளும் பயன்படுத்தப்படுகிறது. இலவசமாக கிடைக்கும் வெள்ளைப்பூண்டு கழிவுகளை சேகரித்து, நிலத்தில் கொட்டி உழுகும் போது, மண்ணில் தீங்கு விளைவிக்கும் வேர்புழுக்கள் அழிகின்றன. மண்ணின் வளமும் அதிகரிக்கிறது. இதனால் கரும்பு, வாழை, தென்னை உட்பட பல்வேறு வகையான பயிர்களிலிருந்து மகசூல் கிடைக்கிறது ,”என்றார்.

## நெல் சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் - விவசாயி சாதனை

சாயல்குடி: சாயல்குடி அருகே கரிசல்மண் நிலத்தில் நவீன தொழில்நுட்பத்துடன் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி விவசாயி ஒருவர் மகசூலில் சாதனை நிகழ்த்தி வருகிறார்.

சாயல்குடியை சேர்ந்தவர் விவசாயி மாரிச்செல்வன், 41. இவர் அதே பகுதியில் உள்ள 2.5 ஏக்கர் கரிசல்மண் நிலத்தில் விவசாயம் செய்துவருகிறார். தண்ணீர் பற்றாக்குறை காரணமாக நெல் சாகுபடி செய்வதை தவிர்த்து வந்துள்ளார்.

வறட்சியை தாங்கி வளரும் எள், மிளகாய் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்துவந்தார். இதில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கவில்லை. இதையடுத்து வேளாண் துறையினர் ஆலோசனையின் பேரில் மீண்டும் நெல் விவசாயத்திற்கு திரும்பினார்.

நிலத்தில் ஒருபகுதியில் அரசு மானியத்துடன் பண்ணை குட்டை அமைத்துள்ளார். மீதமுள்ள இடத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி நெல் விவசாயம் செய்துவருகிறார். இதற்கு பண்ணை குட்டையில் தேங்கும் தண்ணீரை பயன்படுத்தி வாரத்திற்கு ஒருமுறை பாசனம் செய்கிறார். இதன்மூலம் குறைந்த செலவில் ஏக்கருக்கு 50 மூடைகள் வரை நெல் மகசூல் ஈட்டி வருகிறார்.

திருந்திய நெல் சாகுபடியை பின்பற்றுவதால் ஏக்கருக்கு 3 கிலோ விதைகள் போதுமானது.

நெல் நாற்றுகளை வீட்டிலேயே வளர்த்து வருகிறார். நாற்றுகள் வளர்ந்ததும் அவற்றை பறித்து ஒற்றை நாற்று முறையில் சீரான இடைவெளியில் நடவு செய்கிறார். தேவைக்கேற்றவாறு தொழு உரம், ரசாயன உரங்களை பயன்படுத்துகிறார்.

குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைப்பதால், திருந்திய நெல் சாகுபடியை பின்பற்றுமாறு அதே பகுதியைச் சேர்ந்த இதர விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கிவருகிறார்.